பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 18 சனிக்கிழமை 04.12.2021 கதிர் 29

இது ரகசியம் அல்ல!

நேற்றைய திடீர் மின் வெட்டு அரசுக்கு சில செய்திகளைத் தெளிவுபடுத்தியிருப்பதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இன்று அபுதாபியில் நடைபெறும் இந்து சமுத்திர பிராந்திய மாநாட்டில்

பக்கம்02

## அபுதாபியில் இன்று இந்து சமுத்திர உச்சிமாநாட்டில் கோட்டாபய ஆரம்ப உரை; ஜெய்சங்கருடன் சந்திப்பு

கொழும்பு, டிசெம்பர்,03

இந்து சமுத்திர பிராந்திய உச்சி மாநாடு இன்றும் நாளையும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் நடைபெறுகின்றது. அந்த மாநாட்டின் தற்போதைய தலைமைத்துவம் இலங்கையிடம் இருப்பதால், இன்று ஆரம்பமாகும் உச்சி மாநாட்டை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை தாங்கி, அங்கு ராரப்பண உரையை நிகழ்த்துகின்றார்.

இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் கலந்துகொண்டு உரையாற்றுகின்றார்.

மாநாட்டுக்கு இடையே இலங்கை ஜனாதிபதி - இந்திய

8

## பாதுகாப்பு அமைச்சு மீதான வாக்கெடுப்பு நிராகரிப்பு

# கூட்டமைப்பும் முன்னணியும் சபையிலிருந்து வெளிநடப்பு

### ஆளுந்தரப்புடன் கடும் வாக்குவாதம்



பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீது வாக்கெடுப்பு நடத்தாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபையிலிருந்து வெளி நடப்புச் செய்தனர்.

8

## கனேடியத் தூதுவருடன் ரெலோ தனியாகப் பேச்சு

### இது கூட்டமைப்பின் சந்திப்பு என்கின்றார் சுரேந்திரன்



இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினான் மற்றும் உதவியாளர் டானியல் பூட் ஆகியோருடன்

8

## மது போதையில் இளைஞர் குழு அட்டகாசம்; ஒருவர் உயிரிழப்பு; விகாராதிபதி படுகாயம்


(எச்.எம்.எம்.பர்ஸான்)

யானைகளை விரட்டுவதற்குப் பயன்படுத்தும் வெடி இளைஞர் ஒருவரின் வயிற்றில் பட்டதில் சம்பவ இடத்திலே அவர் உயிரிழந்துள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓமனியாமடு-கல்மடு மலையடிவாரம் எனும் இடத்தில் வைத்தே நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மதுபோதையில்அங்குசென்ற ஏழு இளைஞர்களுக்கும்

2



## சிறிதரன் எம்.பி. தமிழகம் விஜயம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மூன்று நாள் விஜயமாக இன்று தமிழகம் செல்கின்றார்.

8

### தவிசாளரின் மேலதிக ஒரு வாக்கால்

## வேலணை பிரதேச சபையின் 'பட்ஜட்' நேற்று நிறைவேற்றம்

(ந.லோகதயாளன்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட யாழ். வேலணை பிரதேச

8

## யானை அடித்து விவசாயி சாவு!

(வி.ரி.சகாதேவராஜா)

காட்டுயானை மதங்கொண்டு தாக்கியதில் காட்டுமடு இளம் விவசாயி ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் பிரதேசத்திலுள்ள கோமாரியையடுத்துள்ள

2

## டில்லியில் மோடியைச் சந்திக்காமல் வெறுங்கையோடு திரும்பிய பஸில்



இந்தியாவிடம்பெருந்தொகையானபொருளாதாரஉதவிகளைப் பெறும் திட்டத்துடன் புதுடில்லி பறந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று கொழும்பு மீண்டார். அங்கு அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பார் எனக் கூறப்பட்ட போதிலும் அந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை.

அதேபோல் இந்தியாவிடம் எதிர்பார்த்த பெருளாதார உதவிகளையும்அவரால்பெறமுடியாமல் போயிற்று என்றும் சில வட்டாரங்கள் முதலில் செய்தி வெளியிட்டன.

2

## 20 பேர் சாவு!

இலங்கையில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 9 ஆண்களும், 11 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரசதகவல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

30 தொடக்கம் 59

2

# தமிழர்களின் சட்டபூர்வ அபிலாஷைகளை நிறைவு செய்வதே இலங்கைக்கு நல்லது

## இந்தியாவின் நிலைப்பாடு அதுவே என ராஜ்ய சபையில் அறிவிப்பு

புதுடில்லி, டிசெ. 04

"இலங்கைத் தமிழர்களின் சட்ட ரீதியான அபிலாஷைகளை நிறைவு செய்வது தான் இலங்கையின் நலனுக்கு மிகச் சிறந்தது என இந்தியா கருதுகின்றது."

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று நாடாளுமன்றின் மாநிலங்கள் அவையில் (ராஜ்ய சபையில்) இலங்கை தொடர்பான தனது நாட்டின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை முன்வைத்தது.

இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகள் தொடர்பில் தனது உறுதிப்பாட்டை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது அமர்வில் இந்தியா மீளவும் வலியுறுத்தியதாகவும் இந்திய வெளிவிகார அமைச்சு மாநிலங்கள் அவையில் சுட்டிக்காட்டியது.

இலங்கை தொடர்பான இந்திய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி நேற்று இந்தியாவின் ராஜ்ய சபையில் வெளிவிவகார அமைச்சு முன்வைத்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்குரார்ப்பண உரை நிகழ்த்துவதற்காக நேற்று மதியம் நாட்டை விட்டுப் புறப்பட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அவர் புறப்படவும் மின் தடை ஏற்படவும் சரியாக இருந்திருக்கின்றமை சுட்டிக் காட்டப்படுகின்றது.

'யுகதனவி' எரிபொருள் நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றும் அரசின் தீர்மானத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியுள்ள இலங்கை மின்சார சபை பொறியியலாளர் தொழிற்சங்கம் அரசுக்கு எதிராக மிரட்டல் அச்சுறுத்தல் விடுத்திருக்கையில் இந்த திடீர் மின்தடை காரணம் – விளக்கம் – கூறப்படாத நிலையில் நாடு முழுவதும் ஆறு, ஏழு மணி நேரம் நீடித்திருக்கின்றது.

நாடுதழுவிய இந்தத் திடீர் மின்தடைக்கு நாச வேலை காரணம் என இலங்கை மின்சார சபையின் உயர்பீடங்கள் கருத்து தெரிவித்திருக்கின்றன.

மின்தடையை சீர் செய்வதற்கான நடவடிக்கைகளிலும் வேண்டுமென்ற தாமதம் காட்டப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இது, ஊழியர் தொழிற்சங்கங்களைப் பகைத்துக் கொள்ளும் அரசாங்கம் எத்தகைய ஆபத்தான இக்கட்டில் சிக்கியுள்ளது என்பதற்கு நல்ல அளவுகோல்.

பொதுமக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான உணர்வலைகள் உச்சக் கட்டத்தில் உள்ளன.

எரிபொருள் சிலிண்டர் வெடிப்புகள் பற்றிய செய்திகளினால், பொதுமக்கள் மத்தியில் மனக்குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என மருத்துவர் ஒருவர் கூறுகின்றார்.

பல வீடுகளில் பெண்கள், சமையலறைகளில் காஸ் அடுப்புகளில் சமையல் செய்ய அஞ்சி சமையல் கட்டுப் பக்கமே தலை வைத்துப் படுக்கின்றார்கள் இல்லை. அதனால் தலைநகரில் பல வீடுகள் ஓடர் பண்ணி எடுக்கும் கடைச்சாப்பாட்டு சிஸ்டத்துக்கு மாறி வருகின்றன.

'காஸ் போபியா' என்ற புதிய வகை மன அழுத்த நோய் குறித்து சம்பந்தப்பட்ட மருத்துவ வட்டாரங்கள் பரிசீலனை நடத்தும் நிலைமை அளவுக்கு விவகாரம் உருவெடுத்துள்ளது.

காஸ் சிலிண்டர் அடுப்புப் பக்கம் தலை காட்டவே அஞ்சும் அம்மணி ஒருவர் தொலைபேசியில் பின்வருமாறு திட்டினார்.

"வெடிப்புகளால் வந்தவர்கள், வெடிப்புக்களால் துலையப் போகிறார்கள்...!" – என்று வைதார் அவர்.

எனக்கு விளங்கவில்லை. என்ன, ஏது என்று விசாரித்தேன்.

'புலிகளோடை சண்டையிலை அறுவான்கள் குண்டுகளை வெடிக்க வைச்சு மனிசரைக் கொன்று தள்ளி, அதிலை பெயரெடுத்து மேலை – அதிகாரத்துக்கு – வந்தார்கள். அஞ்சு வருஷத்திலை அவையின்ரை வண்டவாளம் தெரிஞ்சு அவையளை மக்கள் வீட்டுக்கு அனுப்பினார்கள். எண்டாலும் பிறகு அவன் சஹ்ரானின்ரை குண்டுகள் வெடிச்சதும் அதைப்பயன்படுத்தி, செல்வாக்குக் காட்டி, பிறகும் ஒரு மாதிரி அதிகாரத்தைப் பிடிச்சுக் கொண்டார்கள்.

"இப்ப... சிலிண்டர்கள் வெடிக்கத் தொடங்கியிருக்கு இந்த வெடிப்புகள் உவையளை துலைக்கிறதுக்கு வந்த வெடிப்புகள் பாருங்கோ...!" – என்று மண் அள்ளிப் போட்டு திட்டாத குறையாக பொரிந்து தள்ளினார் அந்த அம்மணி.

நாட்டு மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை ஒவ்வொன்றாக ஆப்படித்து முடக்கி, மக்களை நெருக்கடியில் ஆழ்த்தும் பெருஞ்சதி கட்டவிழ்வதாகவே எனக்குத் தோன்றுகின்றது. எப்படிச் சமாளிக்கப் போகின்றது கோட்டாபய ஆட்சிப் பீடம்.? பொறுத்திருந்து பார்ப்போம்.

★ ★ ★

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியைக் கேட்க வாய்ப்புக் கிடைத்தது. பழைய – இளமைக் கால – நினைவுகளை ஒரு தடவை இரை மீட்டுப் பார்க்க என் நினைவுகளைக் கிளறிவிட்டது அந்தப் பேச்சு.

"ஒரு காலத்தில் இலங்கை வானொலி கொடி கட்டிப் பறந்தது. அதை விரும்பிக் கேட்டவர்கள் எத்தனையாயிரம் பேர்? இந்தியாவில் தமிழ்நாட்டில் இருக்கும் தமிழ் நேயர்கள் கூட இலங்கை வானொலியைத்தான் விரும்பிக் கேட்பார்கள். கே.எஸ்.ராஜா, அப்துல் ஹமீட், அந்தக் காலத்தில் வி.என்.மதியழகன், அருணா செல்லத்துரை... இப்படி பல அறிவிப்பாளர்களைக் கேட்ட இலங்கை வானொலியின் இன்றைய நிலை என்ன? இன்று இலங்கை வானொலியை யார் கேட்கின்றார்கள்? இலங்கை வானொலியில் எங்கு தமிழ் இருக்கின்றது? யோசித்துப் பாருங்கள். எந்தத் தொலைக்காட்சியில், எந்த வானொலியில் தமிழ் ஒழுங்காக இருகின்றது? அதே போலத்தான் தமிழ் மொழி இங்கு புறக்கணிக்கப்படுகின்றது." – என்று விசனத்துடன் சுட்டிக்காட்டினார் சிறிதரன் எம்.பி.

உண்மையான பேச்சு. என் பழைய நினைவுகளைக் கிளறிய உரை.

ஆம். அந்தக் காலத்தில் வானொலிதான் எங்களுக்கு ஒரே பொக்கிஷம். எங்கள் இளமைக் காலத்தில் நம் மனதைக் கவர்ந்திழுத்த ஒரே பொழுது போக்குக் காந்தம் அதுதான்.

வால்வ் ரேடியோக்களின் கரகரப்பு அடங்கி, டிரான்ஸிஸ்டர்கள் கொடி கட்டிப் பறந்த காலத்தில் கே.எஸ்.ராஜா, அப்துல் ஹமீத், வி.என்.மதியழகன் எல்லோரும் எங்கள் கனவுலக நாயகர்கள். டிரான்ஸிஸ்ரை அருகே பாதுகாப்பாக வைத் துக் கொண்டு துயில் கொண்ட நேயர்கள் பல்லாயிரம்.

"வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிகளுக்கு அருகில் இருக்கும்..." – என்று கே.எஸ்.ராஜா கம்பீரக் குரலில் இழுக்கும் போதே எங்கள் மனம் அதற்குப் பின்னால் போய் விடும். 1983 கலவரத்தை அடுத்து தமிழகம் சென்ற அவர், 1987க்குப் பின்னர் இலங் கை திரும்பி இலங்கை வானொலி அறிவிப்பாளர் பணியில் சேர்ந்தார். ஆனால் யாரோ அவரைக் கடத்திச் சென்று கொன்று போட்டு கொழும்புக் கடற் கரையோரம் வீசி விட்டுச் சென்றனர். இன வன்முறை மக்கள் வரவேற்புப் பெற்ற ஓர் அறிவிப்பாளரின் உயிரைப் பறித்தது.

ஆனாலும், எனக்கு என்னவோ வானொலியில் கொடி கட்டிப் பறந்த கே.எஸ்.ராஜாவின் குரலும், அவரின் தோற்றமும், அதன் பின் வந்த தொலைக்காட்சி ஊடகத்தில் கொடி கட்டிப் பறந்திருக்காது என்றே தோன்றியது. அவரும் அந்தப் புதிய படிமானத்துக்குள் வரவில்லை.

ஆனால், வி.என்.மதியழகன், அப்துல் ஹமீட் என்ற ஆளுமைகள் தங்களது கொஞ்சும் தமிழால் வானொலியில் மட்டுமல்லாமல் தொலைக்காட்சி உட்பட திரைகளிலும் நேர்முக நிகழ்வுகளிலும் நேயர்களைக் கட்டிப் போட்டார்கள். அவர்களின் குரலும், தமிழும் மாத்திரம் அதற்குக் காரணமல்ல, அதையும் தாண்டி தோற்றம், பண்பியல்பு, நளினக் கவர்ச்சி, ஆற்றொழுக்கான உரை நடை, பழக்க வழக்கங்கள், ஆளுமைச் சிறப்பு எனப் பல விடயங்கள் அதற்குக் காரணம். ஐம்பது ஆண்டு பணி கடந்தும் அவர்களின் அந்த அறிவிப்பு மிடுக்கு இன்னும் நிகரற்றுத் தொடர்வது கண்டு பொறாமையுறுகிறேன்.

ஆற, அமர இருந்து, யோசித்து எழுதும் எங்களால் அழகு தமிழால் படைக்க முடியாத விடயங்களை சடசடவென ஆற்றொழுக்கான பேச்சால் விருந்தாகப் படைக்கும் அவர்கள் சிறப்பு பாராட்டுக்குரியது.

அட்சரம் பிசகாத அவர்களின் அழகு தமிழை அவர்கள் வழிவழியாய் இளைய தம்பி தயானந்தா வரை கண்டேன்.

அதற்குப் பின்னர் இப்போது ஓரிருவர் தான் கொஞ்சம் தேறுவார்கள். ஏனைய தமிழ் அறிவிப்பாளர்கள் பலருக்கும் தூய தமிழ் 'கொஞ்சம் தோட்டம் துலைவில்' என்ற மாதிரித்தான்.

அப்துல் ஹமீத், வி.என்.மதியழகன் போன்ற மூத்த தமிழ் அறிவிப்பாளர்களின் அழகு தமிழ் நம் எழுத்தாளர்களுக்கும் ஒரு வழிகாட்டல்தான்.

அவர்களைப் பார்த்துப் படித்துப் பயிற்சி பெற்று பழகிக் கொள்ளுங்கள் என்பது தான் எமது இளம் ஊடகத்துறையினருக்கு என் ஆலோசனை...!

– மின்னல் –

## யானை அடித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காட்டுமடு எனும் வயற்பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

கொல்லப்பட்டவர் ஆலையடிவேம்பு கண்ணகிபுரத்தைச் சேர்ந்த து.கஜேந்திரன் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் தினமும் வயற்காவலுக்காகக் கோமாரி சென்று வருபவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசேதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மது போதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஓமனியாமடு விகாராதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின்போது இளைஞரின் வயிற்றில் யானைகளை விரட்டப் பயன்படுத்தும் வெடி பட்டதில் வெலிகந்தைப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஹேரத் முதியன்செலாகே சிசிர குமார எனும் நபர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த விகாராதிபதி பொலனறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை நீதிமன்ற பதில் நீதிவான் ஈ.எல். சஹாப்தீன் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், மரணித்த இளைஞரின் உடலை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

மது போதையில் இளைஞர்கள் அட்டகாசம் புரிந்ததில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 20 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வயதுக்கிடைப்பட்டவர்களில் 4 ஆண்களும், 2 பெண்களுமாக 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 5 ஆண்களும், 9 பெண்களுமாக 14 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 419 ஆக அதிகரித்துள்ளது.

## டில்லியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'வீரமும் களத்தே போக்கி வெறுங்கையுடன் இலங்கை புக்கான்' என்ற இராவணேஸ்வரன் போல் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் எதிர்பார்த்த பொருளாதார உதவித் திட்டங்கள் கிட்டாத நிலையில் நாடு மீண்டிருக்கின்றார் எனக் கூறப்பட்டது.

கடைசியாக இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் இலங்கை வந்திருந்த போது, அவருக்கு உறுதியளிக்கப்பட்ட சில விடயங்களை கொழும்பு இன்னும் நிறைவேற்றாதமை குறித்து பஸிலின் இந்த விஜயத்தின்போது புதுடில்லி தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது எனவும் கூறப்பட்டது.

நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் பலாலி சர்வதேச விமான நிலையத்தை மீளத் திறத்தல், காரைக்கால் – காங்கேசன் படகுச் சேவையை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளும் கொழும்பால் உறுதியளிக்கப்பட்டு தவறவிடப்பட்ட விடயங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

நிதி அமைச்சர் பஸிலின் புதுடில்லி விஜயம் தொடர்பில், புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் இந்தியா பல உதவித் திட்டங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு உறுதியளித்திருக்கின்றது என்று கூறப்பட்டாலும், நிதி அமைச்சர் பஸில் எதிர்பார்த்த காத்திரமான உதவிகளை இந்தியாவிடமிருந்து அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.







பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"ஆரோக்கியமான கலந்துரையாடல்களே வன்முறையற்ற வீடுகளை உருவாக்குவதற்கான திறவுகோலாகும். மௌனம் விடுத்து குடும்ப வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம்!!!"

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

# வடக்கில் சீனா இடைநிறுத்தியுள்ள மின் நிலையங்களை அமைக்க இந்தியா முன்வரவேண்டும் என்கிறார் மனோ



வடக்கு தீவுகளில் சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன்வர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின் உற்பத்தி திட்டங்களை சீன நிறுவனம் இடைநிறுத்தியுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாகத் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள மனோ கணேசன், 'வடக்கு தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இருந்த சீன திட்டம், இந்தியாவின் பாதுகாப்பு ஆட்சேபனை காரணமாக இடைநிறுத்தப்பட்டு விட்டது.

ஆனால், அதற்குப் பதிலாக அதே மின் உற்பத்தி கட்டமைப்பை மாலைதீவின் 12 ஆளில்லா தீவுகளில் முன்னெடுக்க அந்நாட்டு அரசுடன் சீனா உடன்பாடும் கண்டுள்ளது. இந்த நிலையில், அதேபோல் அதற்குப் பதிலாக அதே நம்ம வடக்கு தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன்வர வேண்டும்.

ஏனெனில் இந்த இந்தியா - இலங்கை - சீனா கயிறு இழுப்புகளுக்கு மத்தியில் நம் நாட்டுக்கு, சுத்தமான மின்சாரம் தேவை' எனத் தெரிவித்துள்ளார்.

## ஒரு லட்சம் காணி உறுதிப்பத்திரங்களை மக்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை

காணி உறுதிப்பத்திரமற்ற சகல காணிகளுக்கும் நடமாடும் சேவைகள் ஊடாக ஸ்வர்ணபூமி மற்றும் ஜயபூமி உள்ளிட்ட காணி உறுதிப்பத்திரங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க எழுப்பிய வாய்மூலக் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒரு லட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் இந்த வருட இறுதிக்குள் 75 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1972 ஆம் ஆண்டு காணி சீர்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததில் இருந்தே சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன உறுதியளித்துள்ளார். இதேவேளை கடந்த காலத்தில் 200 காணி உறுதிப்பத்திரங்கள் காணாமல் போயுள்ளன. ஓர் ஏக்கர் காணி ரூபா 500 இற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, அந்த விடயம் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

## எரிவாயு விநியோகத் தடை விதிப்பு தொடர்பாக அரசாங்கம் விளக்கம்

இலங்கையின் உள்ளூர் சந்தைக்கான எரிவாயு விநியோகத்தை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண நேற்று (வெள்ளிக்கிழமை) அறிவித்துள்ளார்.

லிட்ரோ காஸ் லங்கா மற்றும் லாப்ஸ் கேஸ் பி.எல்.சி. ஆகிய இரு நிறுவனங்களுக்கும் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்துமாறு நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு கடிதம் எழுதியுள்ளதாக அவர் கூறினார்.

எரிவாயுக் கசிவை கண்டறியும் மணத்தை உருவாக்கும் இரசாயன பதார்த்தம், உரிய அளவில் இல்லாதமை காரணமாகவே, இந்தத் தீர்மானத்தை எடுத்தோம் என அவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு கசிவைக் கண்டறியும் மணத்தை உருவாக்கும் எதில் மெகப்டன் கொள்கலனில் 14 அலகுகளாக இருக்கவேண்டிய நிலையில், அது தற்போது 5 அலகுகளாக உள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, எதில் மெகப்டனின் மணம் 14 ஆக அதிகரிக்கும் வரை விநியோகம் இடைநிறுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

## விடுதலைப் புலிகளினால் புதைக்கப்பட்ட தங்கம்; அகழ்வு நடவடிக்கைகளை ஆரம்பித்த பொலிஸார்

நாட்டில் இடம்பெற்ற இறுதி யுத்தகாலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தங்கம் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் பகுதியில் அகழ்வு நடவடிக்கைகள் வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நேற்று (வெள்ளிக்கிழமை) யும் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில், நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் அகழ்வு நடவடிக்கைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படும் தங்கத்தை நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய தோண்டி எடுப்பதற்கு முன்னதாக, அமைச்சுக்களின் செயலாளர்கள் இருவர் இரகசியமாக தோண்டி எடுக்க முயற்சித்தனர் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

அதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையிலேயே அகழ்வுநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புலிகளால் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை, முல்லைத்தீவு நீதிவானின் உத்தரவிற்கு அமைய கடந்த நவம்பர் 25 ஆம் திகதி தோண்டி எடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும் மாவீரர் தின நிகழ்வுகளால் இந்த நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

இத்தகைய நிலையிலேயே ஏற்கனவே நீதிமன்றம் அறிவித்த திகதியான வியாழக்கிழமை, மேற்படி அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் அறிவிப்பு

### இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தால்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஜப்பானில் பெண்களுக்கான வேலை வாய்ப்புகளை அறிவித்துள்ளது.

ஜப்பானின் சர்வதேச உறவுகள் நிறுவனத்துடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய வேலைவாய்ப்பு அறிவிப்பின்படி, உணவு பதப்படுத்துதல் துறையில் 20 - 26 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களை 0112 076 446 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

## இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு இந்தியாவுடன் நான்கு அம்ச திட்டம்

கொழும்பு, டிசெ. 04

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கு உதவும் விதமாக உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு தொடர்பான முன்முயற்சிகள் தொடர்பில் விவாதிக்க இந்தியாவும் இலங்கையும் நான்கு அம்ச அணுகுமுறைக்கு ஒப்புக்கொண்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவினால் வழங்கப்பட்ட மருந்துகள், உணவுகள் மற்றும் எரிபொருள் கொள்வனவுகளுக்கான கடன் வரிகள், திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் ஆரம்பகால நவீனமயமாக்கல் திட்டம், இலங்கையின் கொடுப்பனவுச் சமநிலைப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான நாணய மாற்று ஒப்பந்தம், ஆகியவை இந்த நான்கு அம்ச அணுகுமுறைக்குள் உள்ளடங்குகின்றன.

## ஒமிக்ரோன் பற்றி இரு வாரங்களில் தெளிவான கருத்தைப் பெறமுடியும்

### நீலிகா தெரிவிப்பு

கொரோனாவைரஸின் ஒமிக்ரோன் திரிவு தொடர்பாக எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தெளிவான கருத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நீலிகா மளவிகே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் கொரோனா வைரஸின் எந்தத் திரிவு கண்டறியப்பட்டாலும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது முக்கியமானதாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரே நாடு – ஒரே சட்டம் செயலணி கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்

ஒரே நாடு - ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணி நேற்று (வெள்ளிக்கிழமை) கிழக்கு மாகாணத்துக்குப் பயணமானது.

அதன்படி, திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவே இவ்வாறு கிழக்கிற்கு விஜயம் செய்துள்ளது.

ஒரே நாடு - ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் கடந்த இரு வாரத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அதன்படி, முதலாவது மக்கள் சந்திப்பு வடக்கில் இடம்பெற்றிருந்தது. இதன்போது, நாம் ஒன்றுபடுவதை எந்த அரசியல்வாதிகளும் விரும்பவில்லை. ஆகவே, ஒரே நாடு ஒரே சட்டத்தையும் அவர்கள் விரும்பவில்லை என செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஏமாறாதே, ஏமாற்றாதே...!

இலங்கை விவகாரத்தை இனி இந்தியா இப்படித்தான் கையாளும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. அதுதான் நடந்தேறியிருக்கின்றது.

குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள். குட்டுபவனும் முட்டாள் என்பார்கள். அதைத்தான் புரிந்து கொண்டு இராஜதந்திர ரீதியில் பிரதிபலிக்க முயன்றிருக்கின்றது அயல் தேசமான பாரதம்.

ஒருவரை ஒரு தடவை ஏமாற்றலாம். இரண்டு தடவை ஏமாற்றலாம். எல்லோரையும் எப்போதும் ஏமாற்றலாம் என்று எண்ணுபவன் ஒரு நாள் முட்டாளாவான். அந்த நிலைமை தான் கொழும்புக்கு இன்று.

உச்சப் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது இலங்கை. மீளவே முடியாத இக்கட்டு. நாட்டின் நிதி நிலைமை அதலபாதாளத்தில்.

இதிலிருந்து மீளுவதற்காக உலகிடம் கையேந்தி நிற்கின்றது கொழும்பு ஆட்சிப் பீடம்.

பிச்சைப் பாத்திரம் ஏந்தி முதலில் பாரதம் நோக்கிப் புறப்பட்டார் நாட்டின் நிதியமைச்சரும், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் இளைய சகோதரருமான பஸில் ராஜபக்ஷ.

'போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோட, புதுடில்லிக்கு போன ஐயா திரும்பி வந்தார் வெறுங் கையோட' – என்றவாறு நிலைமை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

எனினும், விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று காட்டுவது போல, இந்தியா முன்னர் வழங்க இணங்கிய உதவித் திட்டங்களை மீள ஒரு தடவை முன்னிறுத்தி, நிதி அமைச்சுப் பக்கத்தில் இருந்து 'கயிறு' விடும் அறிக்கைகள் – அறிவிப்புகள் – வரலாம். வரும் என எதிர்பார்க்கலாம்.

இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் ஹரிஷ் வர்தன் ஷ்ரிங்லா இரண்டு மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்தார். தலைநகருக்கு அப்பால் திருகோணமலை, பலாலி, யாழ்ப்பாணம் போன்ற பல இடங்களுக்கும் அவர் விஜயம் செய்த பின்னர் இலங்கை அரசுத் தலைவர்களுடன் விரிவாகப் பேச்சு நடத்தினார்.

அவர் இலங்கை வரும் சமயத்தில் – இந்தியாவுக்கு காதில் பூச்சுற்ற – மாகாண சபைத் தேர்தலை நடத்தப் போகின்றோம் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பகிரங்கமாகக் கயிறு விட்டமை தெரிந்ததுதான்.

இந்திய வெளிவிவகார செயலாளரின் இலங்கை விஜயத்தின் போதும் கடைசியாக சில விடயங்களை இந்தியா வலியுறுத்தியது. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் நடைமுறையாக்கம், மாகாண சபைத் தேர்தல், பலாலி சர்வசேத விமான நிலையத்தைத் திறத்தல், காரைக்கால் – காங்கேசன்துறை படகுச் சேவையை ஆரம்பித்தல் என்று பல விடயங்களை இந்தியத் தரப்பு வற்புறுத்தியது.

அவற்றை எல்லாம் விரைந்து செய்வோம் என அப்போது உறுதியளித்த இலங்கை, அதில் ஒரு பகுதியைக் கூடச் செய்யவில்லை. விடயங்களை முன்நகர்த்தவில்லை. வெறும் வாய்ப்பந்தல் மட்டும் தான் அரங்கேறியது.

இப்போது காஜானா காலி என்றதும் புதுடில்லியிடம் தண்டல் பண்ண புறப்பட்டு வந்த நாட்டின் நிதியமைச்சரிடம் இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டித் தெளிவாக விளக்கியிருக்கின்றது புதுடில்லி.

உதவி கேட்டு வந்த இலங்கை நிதியமைச்சரை, இந்தியா தனது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனைத் தனிய சந்திக்க விடாமல், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரையும் சேர்த்து சந்திக்க வைத்தமையின் பின்னால் புதைந்து கிடந்த சூத்திரம் இதுதான்.

வெளிவிகார அமைச்சுக்கு நீங்கள் கொடுத்த உறுதிமொழிகள் இவை, இவை. இவற்றை நிறைவு செய்யாமல், வெறுமனே வாய்ப்பந்தல் போட்டுவிட்டு, இப்போது உதவி கேட்டு வந்திருக்கின்றீர்கள் என்பதை இலங்கை அமைச்சருக்குச் சுட்டுவதே அதன் நோக்கம்.

இந்திய அரசுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் கணிசமானவற்றைத் தன்னும் நேர்மைத் திறனுடன் முன்னெடுக்கும் போக்கை நிரூபிக்கும் வரை இலங்கைக்கு இந்திய உதவிகள் கிட்டுவது துர்லபம்தான்.

## மாத்தறை நகர அபிவிருத்தி திட்டம் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை



நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து மாத்தறை நகர அபிவிருத்தி திட்டத்தை துரிதப்படுத்துமாறு மாத்தறை மாநகர சபைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், மாத்தறை மாநகர சபை அதிகாரிகள் மற்றும் மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலை அதிகாரிகளுடன் நாடாளுமன்ற குழு அறை 02 இல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாத்தறை நகரில் வாழும் மற்றும் நகருக்கு வருகைதரும் மக்களுக்கு மிகவும் வசதியான சூழல் மற்றும் நகர்ப்புற வசதிகளுடன் கூடிய பிரதேசத்தை உருவாக்குவதே மாத்தறை நகர அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும்.

மாத்தறை நகரின் நிர்வாகச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், பொது வைத்தியசாலையை நவீனமயப்படுத்தி வசதிகளை ஏற்படுத்துதல், முறையான வாகன தரிப்பிடத்தை நிர்மாணிப்பது அவசியமானது என சுட்டிக்காட்டிய ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெரும, நகர மண்டபம் இல்லாத ஒரே மாநகர சபை மாத்தறையாகும்.

புதிய அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாத்தறை மாநகர சபை மற்றும் மாத்தறை பொது வைத்திய சாலையின் உதவி தேவை என நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார தெரிவித்தார்.

கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கு அமைய, மாத்தறை நில்வலா ஆற்றங்கரை பூங்காவின் பாதுகாப்பு வேலியை விரைவாக அமைக்குமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மாத்தறை நகரின் வாகன நெரிசலைக் குறைத்தல், அகுரஸ்ஸ நகரை அண்மித்த வீதிகளை அகலப்படுத்துதல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, கஞ்சன விஜேசேகர, ரொஷான் ரணசிங்க, நாலக கொடஹேவா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த கொடகொட, கருணாதாச கொடிதுவக்கு, நிபுன ரணவக, வீரசுமன வீரசிங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.முணசிங்க, பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, சிரேஷ்ட உதவி செயலாளர் பிரியங்க நாணயக்கார, பிரதமரின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான செயலாளர் உதித லொகு பண்டார, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உதய நாணயக்கார, பணிப்பாளர் நாயகம் என்.பீ. கே.ரணவீர, மாத்தறை மாநகர சபை மேயர் ரஞ்சித் யசரத்ன, நகர ஆணையாளர் காஞ்சன தல்பாவில, மாத்தறை மாவட்ட பணிப்பாளர் வைத்தியர் மல் காந்தி மெதிவக உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கு துணைபோக வேண்டிய தேவை கிடையாது

### சுதந்திரக் கட்சி திட்டவட்டம்

அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கு துணை செல்ல வேண்டிய தேவை எமக்குக் கிடையாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் றோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக சுதந்திரக் கட்சி இருக்கின்றது. ஆனாலும் அதன் தவறான செயற்பாடுகளுக்கும் தீர்மானங்களுக்கும் துணைசெல்ல வேண்டிய தேவை எமக்குக் கிடையாது என றோஹண லக்ஷ்மன் பியதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தற்போதைய அரசாங்கத்தைப் பல்வேறு எதிர்ப்பார்ப்புக்களுடன் மக்கள் ஆட்சிப்பீடம் ஏற்றினர். ஆனால் அவர்களின் எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. மாறாக, பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொண்டுள்ளார்கள் என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் பெரும்பாலான செயற்பாடுகள் அனைவர் மத்தியிலும் அதிருப்தியையே ஏற்படுத்தி இருக்கின்றன. ஆகவே, ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியிலுள்ள 11 பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்தில் இருந்து வெகுவிரைவில் வெளியேறலாம் எனவும் றோஹண லக்ஷ்மன் பியதாஸ குறிப்பிட்டுள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்; மற்றுமொரு சந்தேக நபர் கைதாகினார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரை, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ஹிங்குல பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவரையே சந்தேகத்தின்பேரில் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அம்பாந்தோட்டையில் சஹ்ரான் ஹாசிம் நடத்திய பயிற்சி முகாமில் கலந்து கொண்டார் எனவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களுடன் தொடர்பு வைத்திருந்தார் எனவும் பயங்கரவாதிகளுக்கு உதவினார் எனவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகைச் சுற்றிய முதல்பெண் புலனாய்வு பத்திரிகையாளர்

# நெல்லி பிளை

இன்று உலகைச் சுற்றி வருவது பெரிய விடயமில்லை. ஆனால் 125 ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்ட நாள்களுக்குள் உலகைச் சுற்றி வருவது அத்தனை எளிதான காரியமில்லை. 1873 ஆம் ஆண்டு பிரெஞ்சு எழுத்தாளர் ஜூல்ஸ் வெர்ன் எழுதிய எண்பது நாள்களில் உலகம் முழுவதும் (AROUND THE WORLD IN EIGHTY DAYS) என்ற நாவல் வெளியானது.

80 நாள்களில் உலகை சுற்றி வரவேண்டும் என்ற போட்டியில் வெற்றி பெற கதாநாயகன் பிலியாஸ் பாக் கிளம்புவார். இந்த நாவலை நிஜத்தில் நடத்திக் காட்டினால் என்ன என்று நினைத்தார் நெல்லி பிளை என்ற பத்திரிகையாளர், தான் வேலை செய்யும் 'நியூயோர்க் வேர்ல்ட்' பத்திரிகையின் ஆசிரியரிடம் தன் திட்டத்தைக் கூறினார்.

உலகைச் சுற்றி வரும் சாகஸப் பயணம் எல்லாம் பெண்களால் முடியாது என்றும் பெண்களை அனுப்பக்கூடாது என்றும் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புகளைக் காட்டி வந்தனர்.

நெல்லி பிளை சிறிதும் பின்வாங்கவில்லை. இந்தப் பயணத்துக்கு நிதி அளிப்பவர்களும் ஓர் ஆணின் பயணத்தை விட ஒரு பெண்ணின் பயணம் கூடுதல் சுவாரசியத்தையும் புகழையும் தரும் என்று நினைத்தனர்.

ஓராண்டுக்குப் பிறகு நெல்லி பிளை உலகப் பயணம் செல்வது முடிவானது. காஸ்மோபோலிட்டன் பத்திரிகையும் தன்னுடைய நிருபர் எலிஸ்பெத் பிஸ்லேண்டை உலகம் சுற்றி வர ஏற்பாடு செய்தது.

நெல்லி பிளை கிளம்பும் திசைக்கு எதிர்த் திசையில் எலிஸபெத் பிஸ்லேண்ட் கிளம்ப வேண்டும் யார் 80 நாள்களுக்குள் உலகை சுற்றிவிட்டு முதலாவதாக வந்து சேர்கிறார்கள் என்பது தான் போட்டி.


1889 நவம்பர் 14 காலை 9.40 பொதுமக்கள் பத்திரிகையாளர்கள் செல்வந்தர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். அகஸ்டா விக்டோரியா கப்பலில் ஏறினார் நெல்லி பிளை. எதிர்த் திசையில் கிளம்பினார் எலிஸபெத் பிஸ்லேன்ட், இங்கிலாந்தைக் கடந்து பிரான்ஸ் சென்ற நெல்லி பிளை அங்கு ஜூல்ஸ் வெர்னைச் சந்தித்தார்.



இத்தாலி சூயஸ் கால்வாய் இலங்கை, பினாங்க், சிங்கப்பூர், ஹோங்காங், ஜப்பான் என்று நீராவிக் கப்பல்கள் மற்றும் ரயில்களில் பயணத்தை மேற்கொண்டார் நெல்லி பிளை.

ஆங்காங்கே தந்தி மூலம் தன் பயண விவரங்களை அனுப்பினார். தன்னுடைய அனுபவங்களை நீண்ட கட்டுரைகளாக எழுதி அஞ்சல் செய்தார். சில இடங்களில் வானிலை சரியில்லை சில இடங்களில் அவருக்கு உடல் நிலை சரியில்லை. 75 நாள்களில் தன் பயணத்தை முடிக்கவேண்டும் என நினைத்திருந்தார் நெல்லி பிளை. பசுபிக் கடலில் ஏற்பட்ட மோசமான வானிலையால் அவருடைய பயணத் திட்டம் கொஞ்சம் பின் தங்கியது.







1890 ஜனவரி 25 அன்று நியூஜெர்ஸி வந்தடைந்தார். ஏராளமானவர்கள் திரண்டிருந்து உற்சாகமான வரவேற்பு அளித்தனர். 24,899 மைல்களை 72 நாள்கள் 6 மணி நேரம் 11 நிமிடங்களில் கடந்து உலகைச் சுற்றி வலம் வந்திருந்தார். அவர் புகழ் அமெரிக்காவில் மட்டுமல்ல உலகெங்கும் பரவியது. எலிஸபெத் பிஸ்லேண்ட் 76.5 நாள்களில் உலகைச் சுற்றி வந்துவிட்டார்.

தன்னுடைய அனுபவங்களை 72 நாள்களில் உலகப் பயணம் என்ற புத்தகமாக எழுதி வெளியிட்டார். அவருக்குப் பிறகு நிறைய பேருக்கு உலகைச் சுற்றி வரும் ஆசை ஏற்பட்டது. ஜார்ஜ் ப்ரான்சிஸ் ட்ரெய்ன் 67 நாள்களில் உலகைச் சுற்றி வந்தார். இன்று இன்னும் விரைவாகவே உலகப் பயணம் சாத்தியம். ஆனாலும் நெல்லி பிளையின் முதல் பயணத்துக்கு ஈடு இணை இல்லை.

இவர் 1869 மே 5 ஆம் திகதி பிறந்தார். இவரது இயற்பெயர் எலிஸபெத் ஜேன் கோச்சரன். இது அவர் பிறந்த 156ஆவது ஆண்டு. பணம் இல்லாததால் பாதியில் படிப்பை விட்டுவிட்டார். பெண்களைப் பற்றிய மிகப் பழைமையான கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டிருந்தது ஒரு பத்திரிகை. அந்த பத்திரிகைக்கு மறுப்பு தெரிவிப்பதற்காக நெல்லி பிளை என்ற புனை பெயரில் கட்டுரையை அனுப்பினார். எடிட்டருக்கு கட்டுரைப் பிடித்துப்போனது. அவருடைய கட்டுரை எல்லோரையும் ஈர்த்தன.

கட்டுரைக்காக ஒரு மன நல காப்பகத்தில் மன நலம் பாதிக்கப்பட்டவராக சேர்ந்தார். 10 நாள்கள் தங்கி மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் நடத்தப்பட்ட விதம் மருத்துவம் ஊழல் போன்றவற்றை புலனாய்வு செய்து வெளியிட்டார். பத்திரிகைத் துறைக்கு புலனாய்வு பாணி என்ற புதிய துறையை அறிமுகம் செய்தவர் நெல்லி பிளை. எண்ணெய் டிரம் பால் கான்களின் உருவத்தை சிறிது மாற்றி இன்னும் எளிதாகப் பயன்படுத்தும்படி செய்ததால் கண்டுபிடிப்பாளராகவும் அறியப்படுகிறார். 30 வயதில் திருமணம் செய்து கொண்டு பத்திரிகைத் துறையில் இருந்து விலகினார். 57 வயதில் நிமோனியாவால் பாதிக்கப்பட்டு மறைந்து போனார்.

- ப்ரியமாத பயஸ் -





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 210

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**544. சுமந்திரன் தமிழரது அபிலாஷைகளை பிரதிநிதிப்படுத்துகிறாரா? ஏன் இப்படியான காழ்ப்புணர்வு?**

இவை அரசியலில் இடம் தேடும் படலங்களே ஒழிய உரிமைகளோ விடுதலையையோ நோக்கிய பயணங்களல்ல.

சுமந்திரன் வட்டுக்கோட்டை தீர்மான காலத்திலோ, திம்பு பேச்சுவார்த்தைகளிலோ, நோர்வே காலங்களிலோ அரசியல் புலத்தில் இருந்தவரல்லர். 2009 இன் பின் போரின் முடிவில் தமிழ் மக்களின் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவர். அதுவரை தமிழ் மக்களுக்கான அரசியல், மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்தியவர். அவர் வளர்ந்தது, தொழில்செய்வது கொழும்பில். அத்துடன் கிறிஸ்தவர். அந்த மதம் சார்ந்து பெருமளவிலான சிங்களகிறிஸ்தவர்களுடன்நாடுபூராகவும் உறவாடுகிறார். அரசியலுக்கு வருமுன் தான் நடத்திய வழக்குகள் ஊடாக அவற்றை அவர் படித்ததில், வாதாடியதில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை அபிலாஷைகளை உணர்ந்தவரேயொழிய வட்டுக்கோட்டை தீர்மானத்திலிருந்து நடந்த போராட்டங்களில் இணைந்து அதன்



அனுபவங்களால், அர்ப்பணிப்புக்களால், புடம்போடப்பட்டவர் அல்லர். அவர் வந்த அரசியற்பரப்பு போரின் வெற்றிக்கு பின்னரானது. தமிழ் மக்களின் விருப்பு வெறுப்பில் எதுவித அக்கறையுமின்றி ஒரு நாடாக ஒற்றையாட்சியாக நடத்தப்படுகின்றது.

அது, அப்படியல்லாமல் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டு முன்னேறக் கூடிய, தனது அரசியல் கட்சி கோரும் சமஷ்டி முறையை முன்னெடுக்கிறார் என அபிப்பிராயப்படுகிறேன்.அதில் அவரது சட்டத்தரணியான லாவகம், அணுகுமுறையில் இருக்கலாம். அவற்றை அவர் தனது கட்சிப் பரப்புகளுக்கு தெரிவித்து, கலந்து பேசி, அவர்கள் கட்சியாக தமிழ் மக்களுக்கு எடுத்துச் செல்லவேண்டும். அவை அவரது தனிமனிதனின் தீர்மானமாக முடியாது. எனினும் விதண்டாவாதங்கள் அவர் அவற்றை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தும் அல்லது பகிர்ந்து கொள்ளும் முறைகளில், அவரது இயல்புகளிலிருந்து தோன்றுகின்றன. தன் பல்லில் நஞ்சில்லை என்பதால் நீர்ப்பாம்பு எந்த விதமான கரவுமில்லாமல் கடற்கரையில் கிடக்க, பாம்பு என்ற தோற்றத்தால் அடிவாங்குமாம். அது அவரது நிலை என எண்ணுகிறேன். ஆனால் கரந்துறையும் நாகம் என ஒரு சாரார் பார்க்கிறார்கள். அவற்றுக்குக் காலத்தால் தான் பதில் சொல்லப்படும்.

நீதியரசர் விக்னேஸ்வரனின் பின்னணி மாறுபட்டதல்ல. அவரும் கொழும்பில் சிங்கள சொந்தங்களோடு வாழ்ந்து, 2009 போரின் பின் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டு, முதலமைச்சராக இருந்த நாள்களில் நடந்த அரசியல்களால் புடம் போடப்பட்டவர். இன உறவுகளை இன்னுமொரு கோணத்தில் பார்த்து ஒரு நாட்டிற்குள்ளான தீர்வைக் கூட்டாட்சி முறையில் நோக்குகிறார். நாட்டிலுள்ள இளைஞர்களோ அன்றில் 1983இன் பின் வெளியேறி புலம்பெயரில் வாழும் அவர்களின் பெரும்பகுதியினரே சந்தித்த, பார்த்த, பழகிய அனுபவங்கள் பெற்ற சிங்களவர் 'ஆமிக்காரன்' மட்டுமே. தங்களின் உடைமைகளுக்குத் தீயிட்டவனையும், கொலை செய்தவனையும், கற்பழித்தவனையும்தான் அவர்கள் அறிவார்கள். அப்படியான மக்களோடு வாழ்வது இயலாது. வெட்டி வெளியேற வேண்டும் என்றே நிற்பார்கள். நல்லிணக்கம் என்ற பரப்புக்கு அவர்களை ஒற்றையாட்சி, அதிகாரப்பரவல் என்ற போர்வைக்குள் அழைத்து வருவது கடினம். அனால் அவர்களும் இன்றைய நிலையில் தனிநாடென்பது முயற்கொம்பு என்பதை உணர்ந்து கொண்டாலும் ஏற்றுக்கொள்வதில்லை. தாம் நம்புவது அவராலே வரும் என்ற நம்பிக்கையில் வாழுகிறார்கள்.


தமிழ் மக்களது அவலங்களை, அபிலாஷைகளைப் பிரதிபலித்து அவற்றுக்கு அர்ப்பணிப்பு செய்பவர்கள் அவர்கள். இவர்கள் எல்லாருமே தமிழ் மக்களின் தற்போதைய வளங்கள். ஒன்றுக்கொன்று முரணாகாமல் - ஒத்தநிலையில் - கட்டுப்பாட்டுடன் தீர்வுகளை நோக்கிப் படிப்படியாக முன்னேற முன்வர வேண்டும். அதற்கான அடிப்படைப் புரிதல் வேண்டும்.

**545. அந்த அடிப்படைகள் என்ன?**

வட்டுக்கோட்டை தீர்மானம் ஏற்படுத்திய நாள்தொட்டு தமிழர்களின் எத்தனை அரசியல் தலைவர்கள் வருடாவருடம் நாடாளுமன்றத்தில் தாம் தனி அரசாக இருந்தது, பிரித்தானியாவால் காலனித்



துவ காலத்தில் இணைக்கப்பட்டவர்கள், பறிக்கப்பட்ட இறைமை மீளத் தரப்பட வேண்டும், சுயாட்சி தேவை என்று பேசி பதிவுகள் செய்திருக்கிறார்கள்?



அதே தலைவர்கள் ஸ்ரீலங்காவிலுள்ள பல நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவற்றை நேரடியாக எடுத்து விளக்கியிருக்கிறார்களா? அப்படி எத்தனை பேர்? அமிர்தலிங்கம், சம்பந்தன் இரண்டு பேருமே எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்தபோது வெளிநாட்டுத் தலைவர்களுடன் எத்தனை சந்திப்புக்களில் தமிழ் மக்கள் தனி இனமாக வாழ்கிறார்கள் என்று குறிப்பிட்டு, அப்படி கணிக்கப்பட ஆதரவுகள் தேடியிருக்கிறார்களா?

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மட்டுமல்ல, தமிழர்புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் எல்லாவற்றிலும் அமைப்புக்கள் வைத்து எத்தனை வருடங்கள் அந்த நாடுகளின் அமைச்சுக்களுக்குப் புலம்பெயர் தலைவர்கள் சமர்ப்பணங்கள் தந்திருக்கிறார்கள்? தமிழ் மக்கள் தனி இனம், சுயநிர்ணய கோரிக்கைக்கு உரித்தானவர்கள் எனப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தியிருக்கிறார்கள்? ஆர்ப்பாட்டங்களிலிருந்து கூக்குரலிட்ட தமிழ் மக்களையும் அவர்கள் பிடித்த கொடிகளையும் எவ்வளவு சர்வதேச நகரங்கள் கண்டிருக்கின்றன? கேட்டிருக்கின்றன?

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளிலும் ஐ.நாவில் கூட எத்தனை தமிழ் தலைவர்களும் அவர்களின் புத்திஜீவிகளும் தங்களது இறைமையைப் பற்றி எடுத்துரைத்திருக்கிறார்கள்?

இவ்வளவு அர்ப்பணிப்பான சமர்ப்பணங்கள், வெளிப்பாடுகள் இருந்தும் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் இன்றும் இலங்கையை ஒரு நாடாகவும், அங்கு பல் இன, மத மக்கள் சிறுபான்மையினராக வாழ்பவர்களாகத் தான் பார்க்கின்றன. அவர்களுக்கு நடக்கின்ற மனித உரிமை மீறல்களிலிருந்து சமாதானமான, நீதியான வாழ்வு வேண்டும் என்ற கணக்கெடுப்பே உள்ளது.

அப்படியானால் சர்வதேசத்தை தமிழ் மக்கள் தாம் கோரிய அல்லது அதை அடைவதற்காக இதுவரை நடத்திய அரசியலால் தம் பக்கம் தமது ஆதரவுக்காக அணைத்துக் கொள்ளவில்லை என்பது தான் புரிதலாக வேண்டும்.

72ஆம் ஆண்டிலிருந்து இறைமைக்கான கோரிக்கைகளும், பின்னர் நடந்த ஆயுதப் போராட்டமும் நடந்தாலும், சர்வதேச சமூகம் இலங்கையை ஒரு நாடாகவும் தமிழ் மக்கள் அங்கு தனித்துவமான ஆட்சிக்கு அருகதையுள்ளவர்கள் என இன்றும் ஏற்றுக்கொண்டிராத நிலைப்பாட்டையும் தான் அவர்களது டுவீட்களில் வெளிப்படுத்தப்பட்டன. அதைத்தான் முக்கியமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

**546. அதற்கு சுமந்திரனும் குழுவும் பேச்சுவார்த்தைகளில் அப்படி எடுத்துச் சொன்னதால் அதனை ஏற்று டுவீட் செய்தார்கள் என்ற வியாக்கியானம் ஏன் வேண்டும்?**

டுவீட் பண்ணிய இளைஞர்களோ, சுமந்திரனோ (ஊடகப் பதிவின் அடிப்படையில்) என்ன கேட்டார்கள்?

அதில் இறைமை பற்றியோ தமிழர் தேசம் பற்றியோ ஒரு வார்த்தைதன்னும் இல்லை. 'தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்' என்பது மட்டுமே சொல்லப்பட்டது. அவர்கள் பல்லாண்டுகளாக வாழ்கிறார்கள். அதிலென்ன? எந்த அடிப்படையில் அவர்கள் வாழ்ந்தார்கள் என்ற கருத்துக்கள் கூட இல்லை.

அதற்கமைய வெளியுறவு துறையும் இலங்கை தமிழ் மக்களுடன் நிரந்தர சமாதானம் மற்றும் அவர்களின் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் முழுக்குரல் கொடுப்பதற்காக அமெரிக்கா இணைந்து கொள்கிறது என டுவீட் செய்தது. அது அவர்களின் எந்தக் கோரிக்கையின் அடிப்படையில் அப்படியான குரல் கொடுக்கும் என்பது தெளிவில்லை. ஆனால் சுமந்திரனது பேச்சுக்களுக்குப் பின்னோ இளைஞர்களின் டுவீட்டின் எதிரொலியோ



இரண்டும் இணைந்தவையோ ஆதரவுக்கான படிகள் இந்த நாடுகளிலே கட்டப்பட்டுள்ளன. அது முக்கியம். ஆனால் தமிழ் மக்களது அரசியல் உடனேயே துரோகி என ஆர்ப்பாட்டங்கள் செய்து சர்வதேசத்திற்கு நாங்கள் இப்படித்தான் என வெளிப்படுத்தியது.

இவை சர்வதேசத்தின் மனப்போக்கை மாற்றக் கூடிய வழிவகைகளா, அணுகுமுறைகளா என்பவற்றை இந்தச் சர்ச்சைகள் வெளிப்படுத்துகின்றன. அப்படியான தொடரும் அரசியலுக்கு அவை கோடி காட்டுகின்றன. அவற்றைப் பற்றி தெரிவு கொள்ள சில பழைய சம்பவங்களை மீளப்பார்க்க வேண்டும்.

(வளரும்....)

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** தர்மம் வெல்லும் என்பது நிச்சயமா?

**பதில் :-** அதர்மம் தோற்கும் என்பது நிச்சயம்!

**உலகநாதரின் ஒப்பீனியன் * இந்த** குசும்புதானே வேணாங்கிறது.

**2. கேள்வி:-** கிண்ணியாவில் ஆறு உயிர்களைப் பறிகொடுத்த பின்புதான் படகுச் சேவை என்றும் பாலம் அமைத்தல் என்றும் எல்லோரும் பேசுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



**பதில் :-** இப்போதுதான் அதிக கோபம் வருகிறது. இவற்றையெல்லாம் செய்யக் கூடியதாக இருந்தும் இதுவரை செய்யாதிருந்த ஆட்சியாளர்களின் அலட்சியம் தெரியவந்திருக்கிறது. இந்த நாட்டில் உயிர்கள் பலியான பிறகுதான் உண்மைகளை அறிய முனைவார்கள் போல. இன, மத, பிராந்திய பகைகளை வளர்ப்பது பற்றி மட்டும் தீர்க்கதரிசனத்தோடு செயற்படுகிறார்கள் பாவிகள். தன் நாட்டு மக்கள் மீதான இவர்களின் நேசிப்பு இவ்வளவுதான் என்று நினைக்க அருவருப்பாய் இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * பரந்து கெடுக உலகியற்றியான் வள்ளுவரை வழிமொழிகிறேனாக்கும்.**

**3. கேள்வி:-** ஈழத்தமிழர் பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இந்தியாவையும் உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சுமந்திரன் குழுவினர் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்களாமே, படித்தீர்களா?

**பதில் :-** யதார்த்தம் அறிந்த புத்திசாலித்தனமான கோரிக்கை. ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட, இந்தியா அளவிற்கு வேறெவர்க்கும் உரிமை இல்லை என்பது வெளிப்படையான உண்மை.

ஒரே மொழி பேசும் மக்கள் வாழும் உறவால் வந்த உரிமை.

மிக அருகில் இருக்கும் அயல்நாடு என்ற உரிமை.

ஏலவே ஈழத்தமிழர் பிரச்சினைத் தீர்வுக்காக அமைதிப்படையை அனுப்பி வைத்த உரிமை.

ஜே.ஆர், ராஜீவ் காந்தி செய்து கொண்ட ஒப்பந்தத்தால் வந்த உரிமை.

இவையெல்லாம் ஈழத்தமிழர் பிரச்சினையில் உட்புக இந்தியாவிற்கு இருக்கும் தனித்தகுதிகள். அமெரிக்கா எவ்வளவு பெரிய வல்லரசாக இருந்தாலும் ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட அதற்கு மனிதாபிமானம் தவிர்ந்த வேறு உரிமை ஏதும் இல்லை. அதனால் உரிமையுள்ள இந்தியாவும், வலிமையுள்ள அமெரிக்காவும் சேர்ந்து செயற்பட்டால் அது அரசியல் சதுரங்கத்தில் இலங்கை அரசுக்கு வைக்கப்பட்ட மிகச் சிறந்த ’செக்’ ஆக அமையும். அங்கு பேசச் சென்றவர்கள் தாம் புத்திசாலிகள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாருக்கு உண்மை விளங்கேல்ல. இது இலங்கைக்கில்ல, சீனாவுக்கு வைச்சிருக்கிற செக்குங்கோவ்வ்.**

**4. கேள்வி:-** ஜனநாயகத்தைக் கருப்பொருளாகக் கொண்டு நடத்த இருக்கிற இணைய மாநாட்டிற்கு அமெரிக்கா நம் இலங்கையை அழைக்கவில்லையாமே. இலங்கையில் ஜனநாயகம் இல்லை என்பதாலா?

**பதில் :-** இன்றைக்கு எங்குதான் ஜனநாயகம் இருக்கிறது? தத்தம் எதிரிகளை உலக அரங்கில் கட்டுப்படுத்த மட்டுமே வல்லரசு நாடுகள் ஜனநாயக உரிமை பற்றிப் பேசுகின்றன. இதுவும் அப்படித்தான். தன் பலத்தை வைத்து மற்றைய நாடுகளுக்குள் இஷ்டப்படி புகுந்து அநியாய ஆட்சிமாற்றங்களைச் செய்து கொண்டிருக்கிற அமெரிக்காவிற்கும் ஜனநாயகம் பற்றிப் பேச உரிமையில்லை என்றே நினைக்கிறேன். மாநாட்டிற்கான அழைப்பின்மை என்பது, இலங்கையை ஜனநாயக வழிக்குத் திரும்பச் செய்யும் நிர்ப்பந்தமாய்ப் படவில்லை. அமெரிக்கா இலங்கையைத் தன்வழிக்குத் திருப்பச் செய்யும் நிர்ப்பந்தமாகவே படுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அமெரிக்காவின் சிக்னல் இலங்கைக்குப் புரியுமா?**

**5. கேள்வி:-** காஸ் சிலிண்டர்கள் வெடிக்கத் தொடங்கியிருப்பது பற்றி..

**பதில் :-** இலங்கையில் எப்போதும் ஏதாவது ஒன்று வெடித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்பதுதான் விதி போல. அகத்தியராய் நினைந்து பற்றோடு பார்த்த




சிலிண்டர்களையெல்லாம் இப்போது அணுகுண்டுகளாய் நினைந்து பயத்தோடு பார்க்கவேண்டியிருக்கிறது. எல்லாம் காலக்கொடுமை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வெடிக்கும் என்பார் வெடிக்காது. வெடிக்காதென்பார் வெடித்துவிடும். ஹி..ஹி..**

**6. கேள்வி:-** நம் நாட்டிலும் பெற்றோலியம் எடுக்கப் போகிறார்களாமே?

**பதில் :-** வறுமைப்பட்ட நாடாய் இருந்தும் வல்லரசுகள் நம் நாட்டை வட்டமிடுகின்றன. இதுவும் நடந்தால் இலங்கையின் கதி அதோகதியாகத்தான் இருக்கப் போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * எல்லாம் கிளறிமுடிஞ்சு இனி இதைக் கிளறப்போறீனமாக்கும்.**

**7. கேள்வி:-** வெள்ளப்பெருக்கு எப்படி?

**பதில் :-** நம் நாட்டில் இன்று பலவிடயங்கள் வற்றிப் போய் மக்களைத் துன்புறுத்துகின்றன. இந்த மழையோ பெருக்கெடுத்துத் துன்புறுத்துகிறது. காலம் பிழைத்ததால் மழைக்காலமும் பிழைக்கிறது போல.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கெடுப்பதூ ஊ.. ஊ.. ஊ.. ஊ.. ஊ.. ம் சும்மாவாக்கும்!**

**8. கேள்வி:-** யாழ் நகரின் புதிய மேயர் மணிவண்ணனின் செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன?

**பதில் :-** பதவியேற்றதும் சாதனை வரைபடத்தில்



ஏறத்தொடங்கிய கோடு இப்போது சற்று இறங்கத் தொடங்குமாப்போல் தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * மீண்டும் ஏறலாம் தானே?**

**9. கேள்வி:-** எல்லாக் கேள்விகளும் சீரியசாய்த் தான் இருக்கவேண்டுமா? கொஞ்சம் விளையாட்டாகவும் பதில் சொன்னால் என்னவாம்? இதோ அதற்கான கேள்வி. பாம்புக்கும் இன்றைய சினிமா இயக்குநர்களுக்கும் விளையாட்டாய் சில ஒப்புவமைகள் சொல்லுங்களேன்?

**பதில்:-**சொல்லமாட்டேன் என்று நானா சொன்னேன்? விளையாட்டுக் கேள்விகளில் எனக்கும் விருப்பம் உண்டு. இதோ உங்கள் கேள்விக்கான பதில்.

(எ)சட்டை கழட்டுவதும் (நடிகைகளுக்கு) படம் எடுத்து விஷம் ஏற்றுவதும்தான் எனக்குத் தெரிந்த அவ்விரண்டுக்குமான ஒப்புவமைகள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * சீய்! போங்..ங்..ங்..கோ வாரிதியார்.**

**10. கேள்வி:-** அண்மையில் நீங்கள் ரசித்த ஏதாவது ஒன்றைப் பற்றிச் சொல்லுங்களேன்.

பதில் :- தற்செயலாக youtube இல் மறைந்த இயக்குநர் சிகரம் பாலச்சந்தர் அவர்கள் இயக்கிய மரபுக்கவிதைகள் தொடரினைப் பார்த்தேன். (youtube இல் மரபுக்கவிதைகள் என்று அடித்தால் முழு நாடகத்தையும் பார்க்க முடிகிறது.) வியந்து போனேன். தொலைக்காட்சிகளில் நாடகத்தொடர்கள் வரத்தொடங்கிய காலத்தில் பாலச்சந்தர் செய்த புதிய முயற்சி அது. கதை, நடிப்பு, டைரக்ஷன், பாத்திரப் பொருத்தம், வசன அமைப்பு என அத்தனைக்கும் நூறு, நூறு புள்ளிகள் இடலாம் போல் தோன்றியது. ஒரு குடும்பத்திற்குள் ஏற்படக்கூடிய இயல்பான குழப்பங்களை மையமாகக் கொண்ட கதை. ஒவ்வொரு எபிசோட் முடிவிலும் அடுத்ததைத் தேட வைத்திருக்கிறார் பாலச்சந்தர். நல்லவர், கெட்டவர் என்கின்ற இயல்புகளைத் தனித் தனிப் பாத்திரங்களாக்காமல் ஒரு பாத்திரத்திற்குள்ளேயே இரண்டையும் கலந்து வைத்துக்



காட்டி வியக்க வைத்திருக்கிறார் அவர். வேறுபட்ட மனிதர்களைக் கொண்ட குடும்பத்திற்குள், ஒருவரையொருவர் ஜீரணிக்கவும் ரசிக்கவும் காட்டித் தருகிறார். பிழையானவர் சரியானவராக மாறுவதையும் சரியானவர் பிழையானவராக மாறுவதையும் இயல்பாக அமைத்துக் காட்டுகிறார். இப்படி இன்னும் பல. அத்தனை நடிகர்களும் விளாசித் தள்ளுகிறார்கள்.

(09ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழரின் காணி பிடிக்கவா ஜீவனுக்கு ஆளுநர் பதவி?

## நாடாளுமன்றத்தில் சிறிதரன் சீற்றம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.04

தமிழ் மக்களின் காணி பிடிக்கவா ஜீவன் தியாகராஜா ஆளுந ராக நியமிக் கப்பட்டார்என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் பாதுகாப்பு அமைச் சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான நேற்றைய விவாதத்தின்போதே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

மக்களின் நிலங்களை அபகரித்த படையினர் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலா அந்த நிலங்களில் அடுக்கு மாடிகளை கட்டுகின்றனர் என கேட்க விரும்புகின்றேன். தமிழர்களின் பாரம் பரிய நிலங்கள் கபளீகரம் செய்யப்படு கின்றன.

இதேநேரம் முல்லைத்தீவில் நவம்பர் 27ஆம் திகதி ஊடகவியலாளர் விஸ்வா மீது இராணுவத்தினர் மிலேச்சத்தன மாக தாக்குகின்றனர். டிசெம்பர் 02ஆம் திகதி உதயன் பத்திரிகையின் செய்தியாளர் சுலக்சன் பருத்தித்துறையில் துப்பாக்கி முனையில் பொலிஸாரால் அச் சுறுத்தப்ப டுகின்றார். இது பொலிஸாரின் அராஜகம். ஊடகவியலாளர்களிற்கு இதுதான் நிலைமை. அவர்களின் நிலை இவ் வாறு தான் உள்ளது. ஊடகவியலாளர்கள் சுதந் திரமாக செய்தியை எடுக்க முடியவில்லை. ஊடகவியலாளர்களிற்கு எதிராகத்துவக்கு தூக்கும் பொலிஸார் யாழ்ப்பாணத்திலே கடந்த ஒருவாரத்தில் ஆறு ஆண்களின் சடலம் கடல் கரையில் கரைஒதுங்கியுள் ளமை தொடர்பில் ஏதும் கண்டறியவில் லை. மொத்தம் ஆறு உடல்கள் கரை ஒதுங்கியபோதும்எதுவுமேஎவருடையது என இனம் காணப்படவில்லை.

இலங்கையின் பொலிஸார் கெட்டிக் காரர்கள். ஊடகவியலாளர்களைச் சுடுவார் கள், மக்களைச் சுடுவார்கள், ஆனால் இந்த உடல்கள் யாருடையவை எனக் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளார்கள்.

இதேநேரம் வடக்கில் யாரும் காணி அளக்க இடையூறாக இருந்தால் - அவர் கள் அரசியல் தலைவர்கள் என்றாலும் - அவர்களைப் பிடித்து உள்ளுக்கு தள்ளு வேன் என்கின்றார் ஆளுநர் ஜீவன் தியா கராஜா. காணி பிடிக்கவா ஜீவன் தியாக ராஜா ஆளுநராக நியமிக்கப்பட்டார்? - என்றார்.

---

### சிறிதரன் எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இன்று காலை மதுரை சென்றடையும் அவர், மாலை விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் வன்னி அர சின் தந்தையின் நினைவுப்பகிர்வு நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

மாலை 5 மணியளவில் ஆரம்பமா கும் இந்த நிகழ்வில் மாநில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்த மூன்று நாள் தமிழகப் பயணத் தில் சிவஞானம் சிறிதரன் எம்.பி., பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அதே நேரம் தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்க ளையும் மற்றும் பல்வேறு தொழில் முயற் சியாளர்களையும் சந்தித்துக் கலந்துரை யாடவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் சிறிதரன் எம்.பியின் இந்த பயணம் அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

---

### கனேடியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கா ளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ தனி யாகச் சந்திப்பு நடத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவ ரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான கோவிந்தன் கருணாகரம், எஸ். வினோநோகராதலிங்கம் மற்றும் ரெலோ வின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்புக்குறித்து தகவல்வெளியிட்ட ரெலோ பேச்சாளர் சுரேந்திரன் இதனை கூட்டமைப்பின் சந்திப்பாக வழமைபோல தெரிவித்தார்.

---

### வேலணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவிசாளரின் மேலதிக ஒரு வாக்கால் நேற்று நிறை வேற்றப்பட்டது.

வேலணை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்துக்கான விசேட கூட்டம் நேற்று சபையின் தவிசாளர் ந.கருணா கரகுருமூர்த்திதலைமையில்நடைபெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணியின் 2 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஓர் உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத் துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசி யக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலா ஓர் உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட் டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

பின்னர் சபையின் தவிசாளர் மேலதி கமாக ஒரு வாக்கைச் செலுத்த முடியும் எனும் உள்ளூராட்சி சபை சட்டத்துக்கு அமைவாக தவிசாளர் தனது வாக்கை ஆதரவாகச் செலுத்தியதன் மூலம் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

---

### கூட்டமைப்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. பிரதான சபை நடவடிக்கைகள் நிறைவ டைந்த பின்னர் பாதுகாப்பு அமைச்சுக் கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

விவாதத்தின் நிறைவில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை அங் கீகரிப்பது தொடர்பில் வாக்கெடுப்பை நடத் துமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் எம்.பி., தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கான அனுமதியை சபாநாயகர் வழங்கவில்லை. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவ்வாறான தீர்மானம் எடுக் கப்படாமையால் அதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்று சபாநாயகர் சுட்டிக்காட் டினார்.

எனினும், அவர்களின் அந்த ஆட் சேபனை பதிவு செய்யப்படும் எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதனை இவ்விரு கட்சிகளின் எம்.பிக் கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வாக்கெடுப் புக்கு அனுமதி வழங்கப்படாததால் ஆளுந் தரப்புடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அவர்கள், சபையில் இருந்து வெளிநடப் பும் செய்தனர்.

---

### அபுதாபியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்து சமுத்திரக் கரையோர நாடுக ளைச் சேர்ந்த பிரதிநிதிகள் சுமார் இரு நூறு பேர் பங்குபற்றும் இந்த மாநாட்டில் முப்பது நாடுகளைச் சேர்ந்த ஐம்பது பேர் வரை உரையாற்றவுள்ளனர்.

இந்தத் தடவை 'இந்து சமுத்திரம்: சூழ லியல், பொரு ளா தாரம், பெருந்தொற்று' என்ற தலைப் பில் இந்த உச்சிமாநாடு நடைபெறுகின் றது.

இந்த அமைப்பின் தற்போதைய தலைமைப்பொறுப்பை இலங்கை சார்பில் 2019 இல் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஏற்றிருந்தார். அந்த வகையில் அவரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

தவிரவும், இலங்கையின் வெளிவி வகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் ஜனாதி பதியுடன் இந்த மாநாட்டில் பங்குபற்று கின்றனர்.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குழுவினர் நேற்று மதியம் அபுதாபி புறப் பட்டனர். (உ)

---

# சஹ்ரானின் மனைவிக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரம் சமர்ப்பணம்

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திர தாரி சஹ்ரான் ஹாசிமின் மனைவியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவிற்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களத்தி னால் நேற்றுமுன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திக திக்கும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதி யில் சாரா ஜஸ்மின் என்றழைக்கப்பட்ட புலஸ்தினி மகேந்திரன் என்பவர் வெடி பொருள்களை தயாரித்தமை மற்றும் அவற்றை சேகரித்து வைத்திருந்தமை தொடர்பில் அறிந்திருந்தும், அந்த தக வலை பொலிஸாருக்கு தெரிவிக்காமை குறித்து சஹ்ரானின் மனைவிக்கு எதி ராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் பிரதிவாதியான அப் துல் காதர் பாத்திமா ஹாதியா குற்றமி ழைத்துள்ளார் என குற்றப்பத்திரத்தினூ டாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

பிரதிவாதி கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட் டுள்ளார் என வழக்குத் தொடுநர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய அரச தரப்பு சட்டத் தரணி மாதினி விக்னேஸ்வரன் குறிப் பிட்டார்.

விடயங்களை பரிசீலித்த நீதிபதி ஜே.ட்ரொக்ஸி, எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி பிரதிவாதியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவை மன்றில் ஆஜராக்குமாறு கொழும்பு விளக்கமறி யல் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

---

# நாடு முழுவதும் திடீர் மின் தடை

## நாசகார வேலை எனச் சந்தேகம்

நாடு முழுவதும் நேற்று முற்பகல் 11.30 மணி முதல் மின் விநியோகம் தடைப்பட்டது.

இந்த மின் தடை, மின் பொறியியலா ளர் சங்கத்தின் நாசகார வேலையால் ஏற் பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படு வதாக மின்சார சபையின் பொது முகா மையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மின்சார பொறியிய லாளர்கள் சங்கத்தினர் மின்சார மீள் இணைப்பு பணிகளை வேண்டும் என்றே இழுத்தடிப்பு செய்கின்றனர் என மின்சார சபை பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

எனினும், மின்விநியோகம் சீரமைக் கப்பட்டு வருவதுடன் 400 மெகா வோட் மின்சாரம் மீள் இணைக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கொழும்பில் பல பகுதி களுக்கும் அநுராதபுரம், ஹபரணை, லக்ஷபான - அதுருகிரிய மற்றும் கொத் மலை - பியகம ஆகிய மின் விநியோக பாதைகளுக்கான மின்சார விநியோகம் நேரத்துடன்வழமைக்குத்திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் -

மின் உற்பத்தி நிலையங்களில் சேவை யாற்றும் பொறியியலாளர்களின் சட்டப் படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவ டிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை இரவு 6 மணியளவில் மின் விநியோக சேவை ஓரளவுக்கு வழ மைக்குத் திரும்பியது.

---

# இருபாலையிலும் எரிவாயு அடுப்பில் பெருந் தீப்பரவல்

யாழ்ப்பாணம், டிசெம். 04

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித் துப் பற்றிய சம்ப வம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கோப்பாய் தெற்கு இருபாலை யில் உள்ள ஒரு வீட்டில் தொலைக்காட்சி பார்த் துக்கொண்டிருந்த போது எரிவாயு அடுப்பு பற்றி எரிவதை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று அயலவரை அழைத்துள்ளார்.

அயலவர்கள் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையினால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.

---

# தென்னமரவாடியில் குளவிக் கொட்டுக்கு வயோதிபர் பலி

திருகோணமலை, டிசெ.04

திருகோணமலை - தென்ன மரவாடி பகுதியில் நேற்றுக் காலை குளவிக் கொட் டுக்கு இலக்கான ஒருவர் உயிரிழந் துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர்

அதே பகுதியைச் சேர்ந்த கனகசபை குகநாதன் (69 வயது) எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டிலிருந்து மாடு பார்ப்பதற்காக சென்ற போது மரத்திலிருந்து குளவி கூடு கலைந்து இந்த நபரைக் கொட்டியதா கவும், இதனை அடுத்து புல்மோட்டை தள வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்ற போது அவர் உயிரி ழந்தார் எனவும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

# 75 ஆயிரம் இந்திய இராணுவத்தையே விடுதலைப் புலிகள் தோற்கடித்தனர்!

## மாவீரர் தினத்தை தடைசெய்ய கோருகிறார் பொன்சேகா

மாவீரர் தின அனுஷ்டிப்பை இலங்கை தடை செய்ய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வலியுறுத்தினார்.

மேலும், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண் டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், 2 ஆயிரத்து 500 விடுதலைப் புலிகள் 75 ஆயிரம் இந் திய இராணுவத்தையே தோற்கடித்தார்கள் என்றும் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட அவர் -

யுத்தம் இல்லாத இந்த சூழ்நிலையில், இராணுவத் துக்கு ஏன் அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என சில தரப்பினர் இங்கு குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், ஒரு நாட்டில் யுத்தம் இருந்தாலும் இல்லா விட்டாலும் இராணுவக் கட்டமைப்பு பலமானதாக இருக்க வேண்டும்.

தேசிய ரீதியாக அச்சுறுத்தல் இல்லாவிட்டால்கூட சர்வதேச ரீதியாக வரும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் வகையில், இராணுவம் தயார் நிலையி லேயே இருக்க வேண்டும். நாம் அஞ்சிக்கொண்டு வாழ வேண்டிய தேவையில்லை.

80 களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் 2 ஆயி ரத்து 500 பேரளவிலேயே இருந்தார்கள். இதன்போது 75 ஆயிரம் இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வந்தார்கள்.

ஆனால், விடுதலைப் புலிகள் அவ்வளவு குறை வான ஆள்களை வைத்து இந்திய இராணுவத்தையே தோற்கடித்தார்கள். இதுதொடர்பாக இலங்கையர் என்று நாம் பெருமையாகக்கூட கருத முடியும்.

எனவே, சிறிய நாடு என்று நாம் எவருக்கும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. ஒரு நாட்டின் பாதுகாப்பு பலவீனப்பட்டால், பொருளாதாரத்தை முன்னேற்ற முடி யாது.

90 களில் எமது இராணுவத்தில் 70 ஆயிரம் இரா ணுவத்தினரே இருந்தார்கள். இராணுவம் ஆள்பலத்தில் பலவீனமாக இருந்த காரணத்தினால்தான் யுத்தம் நீடித்தது.

அன்று எமக்கு 90 ஆயிரம் இராணுவத்தினர் இருந் திருந்தால், அன்றே யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்திருக்கலாம்.

கொழும்பு மாவட்டத்தைப் போன்ற பரப்பளவில் சிறிய நாடான சிங்கப்பூர், தமது நாட்டின் பாதுகாப்புக் கென ஆஸ்திரேலியா, வியட்நாம், தாய்லாந்தை விட அதிக நிதியை ஒதுக்குகிறது.

பாதுகாப்பு அமைச்சுக்கென 300 கோடி ரூபா இம்முறை வரவு -செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட் டுள்ளது.

இதன் ஊடாகப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும், இதனை மேலும் பலப்படுத்த வேண்டும் என்பதுதான் எமது கருத்தாகும். ஆள்பலம், ஆயுத பலம் இன்னும் பலமடைய வேண்டும்.

அத்தோடு, இன்று மாவீரர் நினைவு தொடர்பாக ஒரு கருத்தைக் கூறியே ஆகவேண்டும். இதனை கட் டாயமாக நாட்டில் தடைசெய்தே ஆக வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற்றும் எமது கட்சியின் நிலைப்பாடும் இதுவே. இவர்களின் அனுமதியுடன்தான் நான் இந்தக் கருத்தை முன்வைக்கிறேன்.

தற்போதைய பாதுகாப்புச் செயலாளர், கடந்த காலத் தில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தின்போது, மாவீரர் தினம் அனுஷ்டிக்கும் ஒரு நாட்டில் வாழ்வது சாபத்துக்குரியது என கண்ணீர் மல்கப் பேசியமை எனக்கு நினைவில் உள்ளது.

எனவே, மாவீரர் நினைவு நாளை நாம் தடை செய்தே ஆக வேண்டும். இதுதொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் தீவிரமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். இதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது. எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும்.

யுத்தத்தின்போது உயிரிழந்தவர்களை நினைவுகூரு கின்றமை எமக்குப் பிரச்சினையல்ல. ஆனால், அதற்காக பிரபாகரனின் பிறந்த நாளை தெரிவு செய்வதுதான் பிரச்சினைக்குரியதாகும்.

பிரபாகரனை அவரது உறவினர்கள் நினைவுகூரலாம். கொள்ளட்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது தடை செய்யப்பட்ட அமைப்பாகும். எனவே, இதன் உறுப்பினர்களை நினைவு கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

மாவீரர் நினைவு நாளும், ஜே.வி.பியின் நினைவு நாளும் சமமானது கிடையாது. ஜே.வி.பி. இந்நாட்டின் அரசியல் கிளர்ச்சியொன்றை மேற்கொள்ளவே முற்பட் டார்கள். இதற்காக ஆயுதம் ஏந்திய காரணத்தினால்தான் அரசாங்கம் அவர்களை கட்டுப்படுத்தியது.

மாறாக, விடுதலைப் புலிகள் போன்று ஒரு நாட்டை இரண்டாக பிளவடைய வைக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணம் கிடையாது. அல்லது ஓர் இனத்தை இலக்கு வைத்து அவர்கள் தாக்குதல் நடத்தவில்லை.

இன்று கூட விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் வெளிநாடுகளில் இருந்துகொண்டு புலிக்கொடியுடன் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கிறார்கள்.



தங்களின் நோக்கத்துக்காக இன்னமும் வெளிநாடு களில் இருந்து செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார் கள். எனவே, ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளும் ஒன்று கிடையாது.

நாம் வடக்கு அரசியல்வாதிகளுடன் மிகவும் நட்பாக இருக்கிறோம். அவர்களுக்கும் எமக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

ஆனால், ஒரு சில வடக்கு அரசியல்வாதிகள் தங் களின் அரசியல் நோக்கத்துக்காகவே, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இதன் மூலம் மீண்டும் தெற்கு மக் கள் மனங்களில் கோபத்தை விதைக்கவே இவர்கள் முற்படுகிறார்கள். இதனைச் செய்ய வேண்டாம் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

ரஜீவ் காந்தி, ரணசிங்க பிரேமதாஸ, ரஞ்சன் விஜய ரத்ன போன்ற அரசியல் தலைவர்களை கொன்றவர் களை - தேரர்களை பஸ்ஸில் வைத்து படுகொலை செய்தவர்களை - தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தி யவர்களை - ஸ்ரீமா போதி மீது தாக்குதல் நடத்தியவர்களை - காத்தான்குடி பள்ளியில் முஸ்லிம்களை கொலை செய்தவர்களை - அமிர்தலிங்கத்தை கொலை செய் தவர்களை - கிராமங்களுக்குள் புகுந்து பொதுமக்க ளைக் கொலை செய்தவர்களையே மாவீரர் தினத்தின் ஊடாக நினைவுகூர முற்படுகிறார்கள்.

இவ்வாறானவர்களை நினைவுகூர அனுமதிக்கும் அளவுக்கு நாம் கீழ்மட்டத்துக்கு செல்லவில்லை. அத் தோடு, அரசியல்கைதிகளை விடுதலை செய்வதை நாம் முழுமையாக வரவேற்கிறோம்.

அப்படியாயின், என்னைக் கொலை செய்ய குண்டு களைக் கொண்டு வந்த மொரிஸ் என்பவரை முதலில் விடுதலை செய்ய வேண்டும் என நான் அரசாங்கத்திடம் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாட்டும் நானே.........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடிகை சுகன்யாவின் நடிப்பாற்றல் பிரமிக்க வைக்கிறது. மக்களை நேர்வழிப்படுத்தும் நாடகம் இது. கல்கியின் பொன்னியின் செல்வன் கதையை ஒருபாகம் படிக்கத்தொடங்கி, பின் விட முடியாமல் ஓரிரு நாள்களிற்குள் முழுப்பாகமும் படித்து முடித்தது போல, தற்செயலாக இந்த நாடகத்தொடரின் ஒரு பகுதியைப் பார்க்கத் தொடங்கி, விடாமல் இரண்டு நாள்கள் இராப் பகலாக முழு எபிசோட்டுகளையும் ஒரே மூச்சாய்ப் பார்த்து முடித்தேன். பிள்ளைகளோடு குடும்பமாய் இருந்து கட்டாயம் பார்க்கவேண்டிய, வாழ்க்கை வழிகாட்டுதலுடைய நாடகம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியார் இவ்வளவு புழுகுகிறார் என்டால் ஒரு தரம் அதைப் பார்த்துவிட வேண்டியதுதான்.**

**11. கேள்வி:-** அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஓர் அஞ்சலிக் கூட்டத்தில் நம் தமிழ்த் தலைவர்கள் பலர், ஒற்றுமையீனத்தால்தான் நாம் அழிந்து போனோம் என்றும், வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் இதுவரை நாம் எதனையும் சாதிக்கவில்லை என்பது தெரிகிறது என்றும் பேசியிருந்ததைப் பார்த்தீர்களா?

**பதில் :-** ஆஹா! நல்ல விடயம். புத்தருக்கு அரச மரத்தின்கீழ் ஞானம் உதித்ததுபோல, நம் தலைவர்க ளுக்கும் அரச பதவிகளை நினைந்து அவ்வப்போது ஞானம் உதித்து விடுகிறது. எது எப்படியோ? வந்த பாதையை இப்போதாவது திரும்பிப் பார்த்தார்களே! அதுவே பெரிய விடயம். தாம் சாதனை ஏதும் செய்ய வில்லை எனும் உண்மையை ஒத்துக் கொண்டமைக்கு முதலில் அவர்களுக்கு நன்றிகள். இனியாவது இவர்கள் ஒற்றுமைப்பட்டு சாதனைகள் செய்வார்களா? எனக் கென்னவோ இப்போதும் இவர்கள் மனதிலிருந்து பேசுவதாய்த் தோன்றவில்லை. புத்தியால் விளையாடு கிறார்கள் என்றே தோன்றுகிறது. தம்மீதான அக்கறை குறைந்து இனத்தின் மீதான அக்கறை கூடினால்தான் ஒற்றுமையும் சாதனைகளும் சாத்தியமாகும். இப்போ தைக்கு அதற்கான வாய்ப்பு இருப்பதாக எனக்குப்பட வில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ தனியே அவர்க்கோர் குணமுண்டு ஹி..ஹி..**



**12. கேள்வி:-** அர்ஜுன ரணதுங்க, இருக்கும் வரை இருந்துவிட்டு இப்போது ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து வெளிவந்து விட்டமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** எவரை எப்படிப் பந்துவீசி விழச்செய்யலாம் என்பது தெரிந்தவரான கிரிக்கட் வீரராச்சே! சந்தர்ப்பம் அறிந்து பந்து வீசி இருக்கிறார். ரணில் அவுட் ஆவாரா என்பது இனித்தான் தெரியவரும். ரணிலும் தந்திர மான துடுப்பாட்டத்தில் ஒன்றும் சோர்ந்தவரல்லவே! இதுவரை எங்களில் விளையாடி அவர்கள் ரசித்தார்கள். இனியேனும் நாங்கள் அவர்களுக்குள் நடக்கும் விளையாட்டை இருந்து ரசிப் பாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அற்ற குளத் தின் அறுநீர்ப் பறவை போல் உற்றுழி தீர்வார் உறவல்லர்**

**13. கேள்வி:-** தமிழ்நாட்டிற்குள் வெள்ளம் புகுந்ததை அங்குள்ள தொலைக்காட்சி அறி விப்பாளர்கள் 'வெல்லம் புகுந்துவிட்டது, வெல்லம் புகுந்துவிட்டது' என்று அறிவிக் கும் கொடுமையைப் பார்த்தீர்களா?

**பதில் :-** தண்ணீருக்காக அண்டை மாநிலங்களிடம் பிச்சை கேட்டுக் களைத் தும், பல ஆண்டுகளாய் பாலாறு போன்ற ஆறுகளே நீரில்லாமல் வற்றியதைக் கண் டும், நிலத்தடி நீர்மட்டம் பாதாளம் நோக்கிச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தும் சலிப் படைந்திருந்த அவர்களுக்கு வெள்ளம் வெல் லமாய்த் தெரிகிறது போல.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ தமிழ்க் கொலையிலும் ஒரு நயமா?**